செ.வெ.எண் : 26 நாள்: 10.11.2017

## <u>பத்திரிக்கை செய்தி</u>

## கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

**<u>2017ஆம் ஆண்டிற்கான "தமிழக அரசின் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது" வழங்குதல்</u>**

ஒவ்வொரு ஆண்டும், சமூக நீதிக்காக பாடுபடுபவர்களை சிறப்பு செய்வதற்காக "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதினை பெறுவோருக்கு ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) பொற்கிழியும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்பட்டு வருகிறது.

2017 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்குவதற்கு உரிய விருதாளரை தேர்ந்தெடுக்கப்பட உள்ளது. எனவே, கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த சமூக நீதிக்காக பாடுபட்டவர்கள், அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களின் சமூக, பொருளாதாரம் மற்றும் கல்வி மேம்பாடு அடைய மேற்கொண்ட முயற்சிகள், அம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர மேற்கொள்ளப்பட்ட பணிகள், கடந்த ஆண்டுகளில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றுடன் அவர்களது பெயர், சுயவிவரம் மற்றும் முழு முகவரியுடன் கீழ்க்காணும் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

**<u>படிவம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | |
| 2. | பிறந்த இடம் மற்றும் நாள் | |
| 3. | தாய், தந்தை மற்றும் குடும்ப விவரம் | |
| 4. | தற்போதைய முகவரி (தொலைபேசி எண்ணுடன்) | |
| 5. | படிப்பு / தகுதி | |
| 6. | தொழில் | |
| 7. | சமூக நீதிக்காக பாடுபட்ட விவரம் (ஆதாரங்களுடன்) | |
| 8. | பெரியார் கொள்கையில் உள்ள ஈடுபாடு / சமூக சீர்திருத்தக் கொள்கை குறித்து சிறு குறிப்பு | |
| 9. | கலை, இலக்கியம், சமூக பணி ஆகியவற்றில் உள்ள ஈடுபாடு குறித்து சிறு குறிப்பு | |
| 10. | பிற விவரங்கள் இருப்பின் | |

தகுதியானவர்கள்17.11.2017க்குள் விண்ணப்பிக்கலாம் என கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெயியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**